போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

AUGUST 14, 1923.

ந. 15,] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ ஆகஸ்டு ௴ 14௳. [விலை, 9 பை.

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்ட்

ACT OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ட்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1923-ம் ௵ மார்ச் ௴ 5௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. X of 1923.

1923-௵த்து 10-வது ஆக்ட்.

AN ACT TO CONSOLIDATE THE LAW RELATING TO THE GOVERNMENT PAPER CURRENCY.

கவர்ன்மெண்ட் செலாவணி நோட்டுகளைக்குறித்த சட்டதிட்டங்களை ஒன்றாய்ச் சேர்ப்பதற்கான ஆக்ட்.

கவர்ன்மெண்ட் செலாவணி நோட்டுகளைக்குறித்த சட்டதிட்டங்களை ஒன்றாய்ச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, 1923-ம் ௵த்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ப்ரிடிஷ் பலுசிஸ்தானம், ஸந்தால் பர்கானாக்கள் ஆகிய இவைகளடங்க ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கின்றது.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, "எங்கும் செலாவணியாகத்தக்க கரென்ஸி நோட்" என்பது—

(a) ஒரு ரூபாய், இரண்டரை ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய், ஐம்பது ரூபாய் அல்லது நூறு ரூபாய் பெயர்மதிப்புள்ள நோட் என்றாவது,

(b) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் இதுவிஷயத்தில் குறிப்பிடக்கூடிய வேறே யாதொரு பெயர்மதிப்புள்ள நோட் என்றாவது

அர்த்தமாகும்.

கரென்ஸி டிபார்ட்மெண்ட்.

கரென்ஸி நோட்டுகள் வெளிவிடுவதற்காக கரென்ஸி டிபார்ட்மெண்ட்.

3. ஸர்க்கார் வேலையைச் சேர்ந்ததாய், கரென்ஸி டிபார்ட்மெண்ட் என்று சொல்லப்படும் டிபார்ட்மெண்ட் ஒன்று இருந்துகொண்டு வரவேண்டும்; இந்த டிபார்ட்மெண்டின் அலுவலானது - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் உத்தரவுசெய்யும் பெயர்மதிப்புள்ளவைகளாயும், கொண்டுவருகிறவர் கேட்டவுடனே பணம் செலுத்தத்தக்கவைகளாயுமுள்ள இந்தியா கவர்ன்மெண்ட் ப்ராமிஸொரி நோட்டுகளை வெளிவிடுவதாகும்; இந்த நோட்டுகள் கரென்ஸி நோட்டுகள் என்று சொல்லப்படும்.

கரென்ஸி கன்ட்ரோலர்.

4. அந்த டிபார்ட்மெண்டுக்குத் தலைமையாக (இதில் பின்னால் கன்ட்ரோலரென்று குறிப்பிடப்பட்ட) கரென்ஸி கன்ட்ரோலரென்று சொல்லப்படும் ஒரு உத்தியோகஸ்தர் இருக்கவேண்டும்.

நோட் வெளிவிடப்படுகிற ஸர்க்கில்களையும் வெளிவிடப்படுகிற ஆபிஸுகளையும் கரென்ஸி எஜென்ஸிகளையும் ஏற்படுத்த அதிகாரம்.

5. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய்,—

(a) நோட் வெளிவிடப்படுகிற ஸர்க்கில்களென்று சொல்லப்படும் டிஸ்ட்ரிக்டுகளை ஏற்படுத்தலாம்; அவைகளில் ஏழு ஸர்க்கில்களிலே முறையே கல்கத்தா - சென்னபட்டணம் - பம்பாய் - ரங்கூன் - லாஹூர் - கான்பூர் - கராச்சி என்னும் பட்டணங்கள் சேர்ந்திருக்கவேண்டும்;

(b) ஒவ்வொரு ஸர்க்கிலிலும் இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி கரென்ஸி நோட்டுகளை வெளிவிடுகிற இடமாக ஏதாவதொரு பட்டணத்தை நியமிக்கலாம்;

(c) அப்படிப்பட்ட ஒவ்வொரு பட்டணத்திலும் நோட் வெளிவிடுகிற ஆபிஸ் அல்லது ஆபிஸுகளை ஸ்தாபிக்கலாம்; மேலும்,

(d) யாதொரு ஸர்க்கிலிலுள்ள எந்தப் பட்டணத்திலாவது கரென்ஸி எஜென்ஸி என்று சொல்லப்படும் ஒரு ஆபிஸை ஸ்தாபிக்கலாம்.

கரென்ஸி டெப்யுடி கன்ட்ரோலர்களும் கரென்ஸி எஜென்டுகளும்.

6. நோட் வெளிவிடப்படும் ஒவ்வொரு ஸர்க்கிலுக்கும் கரென்ஸி டெப்யுடி கன்ட்ரோலரென்று சொல்லப்படும் ஒரு விசாரணை உத்தியோகஸ்தரும், ஒவ்வொரு கரென்ஸி எஜென்ஸிக்கும கரென்ஸி எஜென்ட் என்று சொல்லப்படும் ஒரு உத்தியோகஸ்தரும் இருக்கவேணடும்.

உத்தியோகஸ்தர்கள் கீழ்ப்பட்டிருப்பது.

7. இந்த ஆக்டின் காரியங்களுக்காக,—

(a) கரென்ஸி டெப்யுடி கன்ட்ரோலர்கள் கன்ட்ரோலருக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும்; மேலும்,

(b) யாதொரு பட்டணத்திலிருக்கிற கரென்ஸி எஜென்டானவர் - நோட்டுகள் வெளிவிடப்படுகிற எந்த ஸர்க்கிலில் அப்படிப்பட்ட பட்டணம் இருக்கிறதோ அந்த ஸர்க்கிலின் கரெனஸி டெப்யுடி கன்ட்ரோலருக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும்.

உத்தியோகஸ்தர்களை நியமிப்பது.

8. இந்த ஆக்டின்படிக்கான சகல உத்தியோகஸ்தர்களையும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் நியமிக்கவேண்டும்.

கரென்ஸி நோட்டுகளைச் சவதரித்துக்கொடுப்பதும் வெளிவிடுவதும்.

கன்ட்ரோலரும் டெப்யுடி கன்ட்ரோலர்களும் கரென்ஸி நோட்டுகளைச் சேகரஞ்செய்து பகிர்ந்துகொடுப்பது.

9. (1) கன்ட்ரோலரானவர் - இந்த ஆக்டின்படி நிர்ணயிக்கப்பட்ட பெயர்மதிப்புள்ளவைகளாயிருக்கிற கரென்ஸி நோட்டுகளைச் சேகரஞ்செய்து, டெப்யுடி கன்ட்ரோலர்களுக்கு இந்த ஆக்டின் காரியங்களுக்காக வேண்டியிருக்கிற நோட்டுகளை அவர்களுக்கு சர்ப்பரா செய்யவேண்டும்.

(2) டெப்யுடி கன்ட்ரோலர்கள் - முறையே தங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கிற கரென்ஸி எஜென்டுகளுக்கு இந்த ஆக்டின் காரியங்களுக்காக வேண்டியிருக்கிற நோட்டுகளை அவர்களுக்கு சர்ப்பரா செய்யவேண்டும்.

(3) எங்கும் செலாவணியாகத்தக்க கரென்ஸி நோட்டல்லாத மேலே கண்ட ஒவ்வொரு நோட்டிலும், அது எவ்விடத்திலிருந்து வெளிவிடப்படுகிறதோ அந்தப் பட்டணத்தின் பெயர் போட்டிருக்கவேண்டும்.

கரென்ஸி நோட்டுகளுக்குக் கையெழுத்து.

10. கன்ட்ரோலருடைய பெயரையாவது, டெப்யுடி கன்ட்ரோலர்களில் ஒருவருடைய பெயரையாவது, கரென்ஸி நோட்டுகளில் கையெழுத்துபண்ணும்படி கன்ட்ரோலராலாகிலும் டெப்யுடி கன்ட்ரோலர்களில் ஒருவராலாகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு நபருடைய பெயரையாவது, அப்படிப்பட்ட ஒவ்வொரு நோட்டுக்கும் கையெழுத்தாகப் போடவேண்டும்: மேலும், அந்த நோட்டின்மேல் அந்தப் பெயரை யந்திரத்தினலே அழுத்தலாம்; அந்தப்படி அழுத்தப்பட்டால் அது சட்டசம்மதமான கையெழுத்தாயிருப்பதாக எண்ணப்படும்.

ஸர்க்கில் விசாரணை உத்தியோகஸ்தர்கள் வெள்ளி அல்லது பொன் நாணயத்துக்காகக் கரென்ஸி நோட்டுகள் வெளிவிடுவது.

11. நோட் வெளிவிடும் ஸர்க்கில்களின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தர்கள்-தங்கள் தங்கள் ஸர்க்கில்களிலே யாராவது கேட்பதன்மேல், தங்கள் தங்கள் ஸர்க்கில்களில் நோட்டுகளை வெளிவிடுவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆபிஸ் அல்லது ஆபிஸுகளிலிருந்து, இந்த ஆக்டின்படி நிர்ணயிக்கப்பட்ட பெயர்மதிப்புள்ளவைகளாயிருக்கிற கரென்ஸி நோட்டுகளை—

1906-ம் வருஷத்து 3-வது ஆக்ட்.

(a) நோட்டுகளின் தொகை எவ்வளவோ அவ்வளவுக்கு ரூபாயையாவது வெள்ளி அரை ரூபாயையாவது 1906-ம் வருஷத்திய இந்துதேசத்துக்காசடிப்பு ஆக்டின்படி நியாயமாய்க் கொடுப்பதாகிற பொன் நாணயத்தையாவது வாங்கிக்கொண்டு கொடுக்கவேண்டும்; அல்லது,

1876-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

(b) நோட்டுகளின் தொகை எவ்வளவோ அவ்வளவுக்கு 1876-ம் வருஷத்துச் சுதேச காசடிப்பு ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அடிக்கப்பட்டு நியாயமாய்க் கொடுக்கப்படத்தக்கவைகளென்று பிரசித்தம் செய்யப்பட்ட ரூபாய்களை வாங்கிக்கொண்டு கொடுக்கவேண்டும்.

கரென்ஸி ஏஜென்டுகள் வெள்ளி அல்லது பொன் நாணயத்துக்காகக் கரென்ஸி நோட்டுகள் கொடுப்பது.

12. யாதொரு கரென்ஸி ஏஜென்டுக்கு 9-வது பிரிவின்படி கரென்ஸி நோட்டுகள் சர்ப்பரா செய்யப்பட்டிருந்தால், அவர் - யாராவது கேட்பதன்மேல், நோட்டுகளின் தொகை எவ்வளவோ அவ்வளவுக்கு 11-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கிற யாதொரு நாணயத்தை வாங்கிக்கொண்டு அப்படிப்பட்ட எவையேனும் நோட்டுகளைத் தமக்கு யுக்தமாகத் தோற்றினல் தம்முடைய ஏஜென்ஸியிலிருந்து கொடுக்கலாம்.

1906-ம் வருஷத்து 3-வது ஆக்ட்.

நியாயமாய்க் கொடுப்பதாகாத பொன் நாணயத்துக்காகவாவது பொன் கட்டிக்காகவாவது கவர்ன்மென்ட் ட்ரெஷரிகளுக்கு (கஜானக்களுக்கு) கரென்ஸி நோட்டுகள் கொடுப்பது.

13. கன்ட்ரோலர் உத்தரவு செய்வதன்மேல், நோட் வெளிவிடும் ஸர்க்கில்களின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தர்கள் - 1906-ம் வருஷத்திய இந்துதேசத்து காசடிப்பு ஆக்டின்படி நியாயமாய்க் கொடுப்பதாகாத பொன் நாணயத்தையாவது பொன் கட்டியையாவது வாங்கிக்கொண்டு ட்ராய் என்னும் நிறையளவைப்படி 11·30016 க்ரெய்ன் கொண்ட சுத்த பொன்னுக்கு ஒரு ரூபாய் வீதம் அதற்கு பர்த்தியாகக் கரென்ஸி நோட்டுகளை யாதொரு கவர்ன்மென்ட் ட்ரெஷரிக்குக் கொடுக்கவேண்டும்.

இன்ன இடங்களிலே கரென்ஸி நோட்டுகளைக் கொடுப்பது நியாயமாகுமென்பதும் இன்ன இடங்களிலே அவைகளுக்குத் தொகை செலுத்தத்தக்கதாகுமென்பதும்.

இன்ன இடங்களிலே கரென்ஸி நோட்டுகளைக் கொடுப்பது நியாயமாகுமென்பது.

14. எங்கும் செலாவணியாகத்தக்க கரென்ஸி நோட்டை ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு இடத்தில் எவராவது கொடுக்க வந்தாலும்,

வேறே யாதொரு கரென்ஸி நோட்டை, அது வெளிவிடப்பட்ட ஸர்க்கிலுக்குள் இருக்கிற யாதொரு இடத்தில் எவராவது கொடுக்கவந்தாலும்,

அந்த நோட்டில் கண்டிருக்கிற தொகைக்கு—

(a) இந்தியா கவர்ன்மென்டாருக்கு ஒரு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகை அளவுக்குச் சேரவேண்டியதாயிருக்கிற யாதொரு ரெவினியு அல்லது வேறே பாக்கியையாகிலும்,

(b) இந்தியா கவர்ன்மென்டாராவது, ப்ரிடிஷ் இந்தியாவிலிருக்கும் சட்டப்படி சேர்ந்த யாதொரு கூட்டத்தாராவது வேறே யாதொரு நபராவது ஒரு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டு கொடுக்கவேண்டிய யாதொரு தொகையையாகிலும்,

செலுத்துவதற்காயினும் அதன் நிமித்தமாகவாயினும் அதைக் கொடுப்பது நியாயமானதாகும்:

ஆனல், நோட்டுகளை வெளிவிடும் யாதொரு ஆபிஸிலே இந்தியா கவர்ன்மென்டாரால் யாதொரு கரென்ஸி நோட் கொடுப்பது நியாயமாக எண்ணப்படமாட்டாது.

கரென்ஸி நோட்டுகளுக்கு இன்ன இடங்களில் தொகை செலுத்தத்தக்கதாகுமென்பது.

15. நோட் வெளிவிடப்பட்ட அடியிற்கண்ட ஆபிஸ்களிலே கரென்ஸி நோட்டுக்குத் தொகை செலுத்தத்தக்கதாகும்; அந்த ஆபிஸ்கள் எவையென்றால்:—

(a) எங்கும் செலாவணியாகத்தக்க கரென்ஸி நோட்டுக்கு (நோட்) வெளிவிடும் யாதொரு ஆபிஸும்;

(b) எங்கும் செலாவணியாகத்தக்க கரென்ஸி நோட்டல்லாத வேறே யாதொரு கரென்ஸி நோட்டுக்கு அது வெளிவிடப்பட்ட பட்டணத்திலுள்ள (நோட்) வெளிவிடும் யாதொரு ஆபிஸும்:

ஆனால், 1910-ம் வருஷம் பெப்ரவரி மீ 18உக்கு முன் வெளிவிடப்பட்ட அப்படிப்பட்ட யாதொரு நோட்டுக்குங்கூட,—

(i) கான்பூரிலாவது லாஹூரிலாவது இருக்கும் ஆபிஸிலிருந்து வெளிவிடப்பட்ட நோட்டின் விஷயத்திலே, கல்கத்தாவிலுள்ள (நோட்) வெளிவிடும் எந்த ஆபிஸிலாகிலும்,

(ii) காரச்சியிலிருக்கும் ஆபிஸிலிருந்து வெளிவிடப்பட்ட நோட்டின் விஷயத்திலே, பம்பாயிலுள்ள (நோட்) வெளிவிடும் எந்த ஆபிஸிலாகிலும்,

தொகை செலுத்தத்தக்கதாகும்.

கரென்ஸி எஜென்ஸிகளிலிருந்து வெளிவிடப்பட்ட கரென்ஸி நோட்டுகளை இன்ன இடங்களிலிருந்து வெளியானவைகளாக எண்ணவேண்டுமென்பது.

16. 14-வது, 15-வது பிரிவுகளின் காரியங்களுக்காக, யாதொரு கரென்ஸி எஜென்ஸியிலிருந்து வெளிவிடப்பட்ட கரென்ஸி நோட்டுகள் - நோட்டுகளை வெளிவிடுகிற எந்த ஸர்க்கிளில் அந்த எஜென்ஸியை ஸ்தாபித்திருக்கிறதோ அந்த ஸர்க்கிளிலே நோட்டுகளை வெளிவிடுகிற இடமாக 5-வது பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட பட்டணத்திலிருந்து வெளிவிடப்பட்டவைகளாக எண்ணப்படும்.

ஆபிஸ் மூடப்படும் விஷயத்தில் நிபந்தனை ஏற்படுத்துவது.

17. (நோட்) வெளிவிடும் யாதொரு ஆபிஸ் மூடப்பட்டால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், அந்த ஆபிஸ் மூடப்பட்ட தேதி முதல் அதிலிருந்து வெளிவிடப்பட்ட சகல கரென்ஸி நோட்டுகளும், 14-வது, 15-வது பிரிவுகளின் காரியங்களுக்காக, ஷை விளம்பரத்தில் குறிப்பிடப்படக்கூடிய வேறே யாதொரு ஆபிஸிலிருந்து வெளிவிடப்பட்டிருப்பதாக எண்ணவேண்டுமென்று கட்டளையிடவேண்டும்.

இருப்பாக வைத்திருப்பது.

கரென்ஸி நோட்டுகளுக்கு இருப்பு.

18. (1) இந்தப் பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - இது விஷயமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் கட்டளையிடப்படக்கூடிய (நியமிக்கப்பட்ட தினம் என்று இதில் பின்னால் குறிப்பிடப்படும்) தினம் வரையில் செலாவணியாகத் தொடங்கமாட்டா.

(2) வழங்கிக்கொண்டிருக்கிற கரென்ஸி நோட்டுகளுக்குப் பூர்த்தியாய்ப் பணம் செலுத்துவதற்காக ஒரு இருப்பு வைத்திருக்கவேண்டும்; அதன்மேல், அப்படிப்பட்ட சகல நோட்டுகளும் - இந்திய வருமானத்தின் பொறுப்பின்பேரிலும் ஷை இருப்பின் பொறுப்பின்பேரிலும் வெளிவிடப்பட்டிருப்பவைகளாக எண்ணப்படும்.

(3) ஷை இருப்பில் இரண்டு பாகங்களுண்டு; அவையாவன:—

(a) உலோக ரூபமான இருப்பு;

(b) பத்திரங்கள் ரூபமான இருப்பு.

(4) உலோக ரூபமான இருப்பிலே, ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களாலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாலும் இது காரணமாக அந்தந்த காலத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் ஸவரன்-அரை ஸவரன் - ரூபாய் - வெள்ளி அரை ரூபாய் - பொன்கட்டி - வெள்ளிக் கட்டி ஆகிய இவைகள் சேர்ந்த மொத்தத் தொகை அடங்கும்:

ஆனால், இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிற விதப்படி கணக்கிட்டு மதிப்பில் ஐந்துகோடி ரூபாய்க்கு அதிகமாக யுனைடெட் கிங்டம் என்னும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களால் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பொன் நாணயம், கட்டி ஆகிய இவைகளின் தொகை எதுவும் ஷை உலோக ரூபமான இருப்பில் அடங்காது.

(5) பத்திரங்கள் ரூபமான இருப்பிலே, ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களாலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்காகவும் இது காரணமாக அந்தந்த காலத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பத்திரங்கள் அடங்கும்:

ஆனால்,—

(a) யுனைடெட் கிங்டம் என்னும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் வெளிவிடப்பட்ட எந்தப் பத்திரங்களுக்குத் தொகை கொடுக்கும் தேதியானது அவைகளைக் கிரயத்துக்குக் கொண்ட தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு மேற்படாமலிருக்கிறதோ அப்படிப்பட்ட பத்திரங்களல்லாமல், ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களால் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் வேறே எந்தப் பத்திரங்களும் பத்திரங்கள் ரூபமான ஷை இருப்பில் அடங்காமாட்டா ; மேலும்,

(b) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்காக வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பத்திரங்கள் இந்தியா கவர்ன்மென்ட் பத்திரங்களாயிருக்கவேண்டும் ; அல்லாமலும், அவை மொத்தத்தில் இருபது கோடி ரூபாய்க்கு மேற்படக்கூடாது ; இந்தத் தொகையில் பன்னிரண்டு கோடி ரூபாய்க்கு அதிகப்படாத தொகைக்கு, இந்தியா கவர்ன்மென்டாரால் புதிதாய் ஏற்படுத்தப்பட்டு கன்ட்ரோலருக்கு வெளிவிடப்பட்டிருக்கும் பத்திரங்களாக இருக்கலாம் (இந்தப் பத்திரங்கள் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட பத்திரங்களென்று இதில் பின்னால் குறிப்பிடப்படும்).

(6) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, "வழங்கிக்கொண்டிருக்கிற கரென்ஸி நோட்டுகள்" என்னும் சொற்றொடரானது - எந்தக் காலத்திலாவது வழங்கிக்கொண்டிருக்கிற கரென்ஸி நோட்டுகளின் மொத்தத் தொகை என்று அர்த்தமாகும் :

ஆனால், ஐம்பது அல்லது நூறு ரூபாய் பெயர்மதிப்புள்ள கரென்ஸி நோட்டுகளின் விஷயத்திலே, அவை வெளிவிடப்பட்ட தேதிக்கு அடுத்து வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நாற்பது வருஷத்துக்குள்ளாகவும், நூறு ரூபாய்க்கு அதிகப்படுகிற யாதொரு பெயர்மதிப்புள்ள கரென்ஸி நோட்டுகளின் விஷயத்திலே அவை வெளிவிடப்பட்ட தேதிக்கு அடுத்து வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நூறு வருஷத்துக்குள்ளாகவும், அந்த நோட்டுகளை அவைகளில் கண்ட தொகை செலுத்தப்படுவதற்காகக் கொண்டுவந்து காட்டாமலிருந்தால், அந்த நோட்டுகள் வழங்கிக்கொண்டிராதவைகளாக எண்ணப்படும் :

மேலும், அப்படிப்பட்ட சகல நோட்டுகளும் இந்திய வருமானத்தின் பொறுப்பின் பேரில் வெளிவிடப்பட்டிருப்பவைகளாக எண்ணப்படும; அல்லாமலும், அவைகளில் கண்ட தொகை செலுத்தப்படுவதற்காக அவைகளைக் கொண்டுவந்து காட்டினால், அந்த வருமானத்திலிருந்து அவைகளுக்குத் தொகை செலுத்தவேண்டும்.

(7) இதில் பின்னால் 20-வது பிரிவில் நிபந்தனை கண்டபடிக்கன்றி மற்றப்படி, எந்தக் காலத்திலாவது வழங்கிக்கொண்டிருக்கிற கரென்ஸி நோட்டுகளின் மொத்தத் தொகையானது - உலோக ரூபமான இருப்புத் தொகையும் பத்திரங்கள் ரூபமான இருப்புத் தொகையும் சேர்ந்து எவ்வளவாகிறதோ அதற்கு மேற்படக்கூடாது :

ஆனால், கரென்ஸி நோட்டுகளை வெளிவிடுவதனால் அந்தந்த காலத்தில் உலோக ரூபமாயுள்ள இருப்புத் தொகைக்கு இரண்டத்தனைக்கு அதிகமான அளவுக்கு வழங்கிக்கொண்டிருக்கும் கரென்ஸி நோட்டுகளின் தொகை உயரக்கூடியதாயிருந்தாலும் அல்லது அப்படி உயரக்கூடிய அளவுக்கும், கரென்ஸி நோட்டுகளை வெளிவிடும்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் கட்டளையிடுவது சட்டசம்மதமாகாது.

(8) (a) உலோக ரூபமான இருப்புத் தொகை இவ்வளவென்று நிச்சயிக்கும் காரியத்துக்காக, ட்ராய் என்னும் நிறை அளவைப்படி 11·30016 க்ரெயின் கொண்ட சுத்தப் பொன்னுக்கு ஒரு ரூபாய் வீதம் பொன் கட்டியையும், எத்தனை ரூபாய் விலையாகக் கொடுத்து வெள்ளிக் கட்டி வாங்கப்பட்டதோ அந்த விலைப்படி வெள்ளிக் கட்டியையும் மதிப்பிடவேண்டும் ;

(b) பத்திரங்கள் ரூபமான இருப்புத் தொகை இவ்வளவென்று நிச்சயிக்கும் காரியத்துக்காக, கிரயத்துக்குக் கொண்ட பத்திரங்களை அவை என்ன விலைக்குக் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டனவோ அந்த விலைப்படியும், புதிதாய் ஏற்படுத்தப்பட்ட பத்திரங்களை அவை வெளிவிடப்பட்ட தேதியில் அம்மாதிரியான பத்திரங்களுக்குக் ஏற்பட்டிருந்த கால விலைப்படியும் மதிப்பிடவேண்டும்.

(9) இருப்பிலுள்ள இந்தியா கவர்ன்மென்டாரின் பத்திரங்களை, கன்ட்ரோலரும் கல்கத்தாவிலுள்ள மின்ட் மாஸ்டர் அல்லது இது விஷயமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் கட்டளையிடக்கூடிய வேறே யாதொரு மின்ட் மாஸ்டரும் - ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் சார்பில் ட்ரஸ்டியாக வைத்திருக்கவேண்டும்.

அங்காமியான நிபந்தனைகள்.

19. (1) வழங்கிக்கொண்டிருக்கும் கரென்ஸி நோட்டுகளின் தொகைக்கும் இருப்பிலிருக்கும் தொகைக்கும் 18-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்டது முதல் (8) குறிப்பிட்டது வரையிலுள்ள உட்பிரிவுகளில் சொல்லியிருப்பதற்குப் பொருத்தமான சம்பந்தம் ஏற்படும்படிச் செய்த பிறகும், உலோக ரூபமாயுள்ள இருப்பானது வழங்கிக்கொண்டிருக்கும் கரென்ஸி

நோட்டுகளின் தொகையில் பாதிக்குக் குறையாமலிருக்கும்படி ஏற்பட்ட பிறகும் சௌகரியமாயிருக்கக்கூடிய சீக்கிரத்தில், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள்-நியமிக்கப்பட்ட தினத்தை நிஷ்கரிஷை செய்யவேண்டும்.

(2) இந்தப் பிரிவில் கண்ட நிபந்தனைகள்நியமிக்கப்பட்ட தினம் வரையில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் ; ஆனால், அந்த தினத்திலிருந்து அவை ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

(3) இதில் பின்னால் 20-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, எந்தக் காலத்திலாவது வழங்கிக்கொண்டிருக்கும் கரென்ஸி நோட்டுகளின் மொத்தத் தொகையானது - ஸவரன்கள், அரை ஸவரன்கள், ரூபாய்கள், வெள்ளி அரை ரூபாய்கள், பொன் கட்டி ஆகிய இவைகளும் ஷை நோட்டுகளுக்குப் பூர்த்தியாய்ப் பணம் செலுத்த ஏற்பாடு செய்வதற்காக ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களாலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாலும் அந்தந்த காலத்தில் இருப்பாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் வெள்ளிக் கட்டியையும் பத்திரங்களையும் வாங்குவதற்காக செலவு செய்யப்பட்ட தொகையும் சேர்ந்து ஏற்படும் மொத்தத் தொகைக்கு அதிகப்படக்கூடாது ; மேலும், ஷை நோட்டுகள் - இந்திய வருமானத்தின் பொறுப்பின்மேலும் ஷை நாணயம், கட்டி, பத்திரங்கள் ஆகிய இவைகளின் ஜாமீன்மேலும் வெளிவிடப்பட்டிருப்பவைகளாகக் கருதப்படும் :

ஆனால், இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக ஐம்பது அல்லது நூறு ரூபாய் பெயர்மதிப்புள்ள கரென்ஸி நோட்டுகளின் விஷயத்திலே அவை வெளிவிடப்பட்ட தேதிக்கு அடுத்துவருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நாற்பது வருஷத்துக்குள்ளாகவும் நூறு ரூபாய்க்கு அதிகப்படுகிற யாதொரு பெயர்மதிப்புள்ள கரென்ஸி நோட்டுகளின் விஷயத்திலே அவை வெளிவிடப்பட்ட தேதிக்கு அடுத்து வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து நூறு வருஷத்துக்குள்ளாகவும், அந்த நோட்டுகளை அவைகளில் கண்ட தொகை செலுத்தப்படுவதற்காகக் கொண்டுவந்து காட்டாமலிருந்தால், அந்த நோட்டுகள் வழங்கிக்கொண்டிராதவைகளாக எண்ணப்படும் :

மேலும், இந்த உட்பிரிவின் முதல் விலக்கு நிபந்தனையின்படி வழங்கிக்கொண்டிராதவையென்று நிர்ணயிக்கப்பட்ட சகல நோட்டுகளும் இந்திய வருமானத்தின் பொறுப்பின்பேரில் வெளிவிடப்பட்டிருப்பவைகளாக எண்ணப்படும் ; அல்லாமலும், அவைகளில் கண்ட தொகை செலுத்தப்படுவதற்காக பிற்பாடு அவைகளைக் கொண்டுவந்து காட்டினால், அந்த வருமானத்திலிருந்து அவைகளுக்குத் தொகை செலுத்தவேண்டும்.

(4) (3) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் பத்திரங்களானவை - க்ரேட் ப்ரிடன் அண்ட் ஐர்லண்ட் என்னும் ஐக்கிய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த அல்லது இந்திய கவர்ன்மெண்டாரின் பத்திரங்களாகவாவது, ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களால் பார்லிமெண்டாரின் ஆக்டினால் ஏற்படும் அதிகாரத்தைக்கொண்டு வெளிவிடப்பட்டு இந்திய வருமானத்தின்மேல் பொறுப்பேற்றப்பட்ட பத்திரங்களாகவாவது இருக்கவேண்டும் ; மேலும், அவைகள் எந்த விலைக்கு வாங்கப்படுகின்றனவோ அந்த விலையின்படி அவைகளின் மதிப்பானது எண்பத்தைந்து கோடி ரூபாய்க்கு மேற்படக்கூடாது.

சிலவகைப் பொன் நாணயத்திற்காகவாவது பொன் அல்லது வெள்ளிக் கட்டிக்காகவாவது ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் வைத்திருக்கும் பத்திரங்களுக்காகவாவது கரென்ஸி நோட்டுகள் வெளியிடுவது.

(5) இந்தியாவில் வெளிவிடப்படும் நோட்டுகளுக்குத் தொகை தவறாமல் செலுத்துவதற்கான இருப்பாக அப்படிப்பட்ட நோட்டுகளின் மதிப்புக்குச் சமமாயுள்ள பொன் நாணயத்தையாவது கட்டியையாவது வெள்ளிக் கட்டியையாவது (4) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் வகைகளைச் சேர்ந்த பத்திரங்களையாவது வைத்திருக்க ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் சம்மதித்தால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - அந்தப்படி ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் நாணயம், கட்டி, பத்திரங்கள் ஆகிய இவைகளின் மதிப்புத் தொகைக்குச் சமமாயுள்ள ஒரு தொகை அளவுக்குக் கரென்ஸி நோட்டுகளை வெளிவிடவேண்டுமென்று அப்போதைக்கப்போது கட்டளையிடலாம்.

(6) இந்த ஆக்டில் இதற்கு மாறாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்தியா கவர்ன்மெண்டாரால் புதிதாய் ஏற்படுத்தப்பட்டு கன்ட்ரோலருக்கு வெளிவிடப்படும் எந்தப் பத்திரங்களும் - இந்த ஆக்டின் காரியங்களுக்காக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் வாங்கப்பட்ட பத்திரங்களாக எண்ணப்படுவதுமல்லாமல், அந்தப்படி ஷை பத்திரங்கள் வெளிவிடப்பட்ட தினத்திலே அம்மாதிரியான பத்திரங்களின் காலவிலையானது மேலே கண்டபடி ஏற்படுத்தப்பட்ட பத்திரங்கள் வாங்கப்பட்ட விலையாகவும் எண்ணப்படும் ; மேலும், அந்தப்படி வாங்கப்பட்ட பத்திரங்களை இந்த ஆக்டில் குறிப்பிட்டிருக்கும் இடங்களிலெல்லாம், அப்படிப்பட்ட சகல குறிப்புகளும் - மேலே கண்டபடி ஏற்படுத்தப்பட்ட பத்திரங்களையும் குறிப்பதாகக் கொள்ளப்

படும்; அன்றியும், அந்தப்படி வாங்கின விஷயத்தில் செலவழித்திருக்கும் தொகைகளையாவது அவைகளுக்காகச் செலுத்தியிருக்கும் கிரயங்களையாவது குறிப்பிட்டிருக்கும் இடங்களில் அப்படிப்பட்ட சகல குறிப்புகளும் - அந்தப்படி ஏற்படுத்தப்பட்ட பத்திரங்களின் விஷயத்திலே, மேலேகண்ட கிரயங்களைக் குறிப்பதாகக் கொள்ளப்படும்; இந்த ஆக்டுக்கும் அப்பிரகாரமே அர்த்தம் பண்ணவேண்டும்.

(7) இந்தியா கவர்ன்மெண்டாரால் புதிதாய் ஏற்படுத்தப்பட்டு கன்ட்ரோலருக்கு வெளிவிடப்பட்டிருந்து, முந்திய உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளை அனுசரித்து ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் வாங்கப்பட்ட பத்திரங்களாக எண்ணப்படுகிற பத்திரங்களின் மதிப்பானது பன்னிரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்டிருக்கிற வரையில், இருப்பிலிருக்கும் பத்திரங்களிலிருந்து கிடைக்கும் சகல வட்டியும் - 1923-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல், எவ்வளவு மட்டில் அதிகப்படியாய் மேலேகண்டபடி பத்திரங்கள் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ அதைக் குறைப்பதற்காக உபயோகிக்கப்படும்; மேலும், ஆடிட்டர் ஜெனரலானவர் - ஒவ்வொரு வருஷத்திலும் அப்படிப்பட்ட வட்டித்தொகையைக் குறித்து ஸெர்டிபிகேட் கொடுக்கவேண்டியதுமல்லாமல், அது அந்தப்படி உபயோகிக்கப்பட்டதா இல்லையா என்பதைக் குறித்தும் உறுதிமொழி கூறவேண்டும். இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக, மேலேகண்டபடி புதிதாய் ஏற்படுத்தி வெளிவிடப்பட்ட பத்திரங்களுக்கு, அம்மாதிரியான இதர பத்திரங்களுக்கு என்ன வீதப்படி வட்டி கொடுக்கப்படுகிறதோ அதே வீதப்படி வட்டி கொடுக்கப்படுவதாக எண்ணப்படும்.

(8) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் வாங்கப்பட்ட பத்திரங்கள் இந்தியா கவர்ன்மெண்டாரின் பத்திரங்களாகும்; மேலும், அவைகளைக் கன்ட்ரோலரும் கல்கத்தாவிலுள்ள மின்ட் மாஸ்டர் அல்லது இது விஷயத்தில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் கட்டளையிடக்கூடிய வேறே யாதொரு மின்ட் மாஸ்டரும் ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் சார்பில் ட்ரஸ்டியாக வைத்திருக்கவேண்டும்.

பில் ஆவ் எக்ஸ்சேஞ்சுகளுக்கு ஈடாக கரென்ஸி நோட்டுகளை வெளிவிட அதிகாரம்.

20. 18-வது பிரிவிலாவது 19-வது பிரிவிலாவது இதற்கு மாறாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - கரென்ஸி நோட்டுகள் வெளிவிடப்படும் தேதி முதல் தொண்ணூறு தினங்களுக்குள்ளாக பணம் செலுத்தவேண்டியதாயும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் பொதுவான அல்லது பிரத்தியேகமான உத்தரவு மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய இதர திட்டங்களுக்குப் பொருத்தமாயுமுள்ள பில் ஆவ் எக்ஸ்சேஞ்சுகளுக்கு ஈடாக மொத்தத்தில் ஐந்து கோடி ரூபாய்க்கு மேற்படாத தொகைக்குக் கரென்ஸி நோட்டுகள் வெளிவிடும்படி கன்ட்ரோலருக்கு அதிகாரம் கொடுக்கலாம். அந்தப்படி வெளிவிடப்பட்ட கரென்ஸி நோட்டுகள் - எவைகளுக்காக இருப்பு வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்தக் கரென்ஸி நோட்டுகளுக்கு உடன்சேர்க்கையாயிருப்பதுமல்லாமல், ஷை பில்லுகள், இந்திய வருமானம் ஆகிய இவைகளின் பொறுப்பின்பேரில் வெளிவிடப்பட்டிருப்பதாகவும் எண்ணப்படும்; மேலும், அந்த நோட்டுகளுக்குத் தொகை செலுத்தப்படுவதற்காக அவை கொண்டுவந்து காட்டப்படும்போது, அந்த வருமானத்திலிருந்து அவைகளுக்குத் தொகை செலுத்தவேண்டும்.

இருப்பாக வைத்திருக்கும் நாணயத்தையும் கட்டியையும் ஒருவகைசெய்ய அதிகாரம்.

21. 18-வது, 19-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இருப்பின் பாகமாகத் தாம் அந்தந்த காலத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நாணயம் அல்லது கட்டியில் எதையாவது, 11-வது பிரிவிற்கண்ட நாணய வகைகளில் எந்த வகை நாணய ரூபமாகவோ, பொன் அல்லது வெள்ளிக் கட்டி ரூபமாகவோ தமக்கு யுக்தமாகத் தோற்றினால் எப்போதாகிலும் மாற்றலாம்.

இந்தியாவில் இராத நாணயம் அல்லது கட்டியானது எப்போது இருப்பின் பாகமாக எண்ணப்படுமென்பது.

22. இந்த ஆக்டில் இதற்கு மாறாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்காக காசடிப்பதற்காகவாவது ஷை கவர்னர் ஜெனரலவர்களுக்கு அனுப்பப்படுவதற்காகவாவது யுனைடெட் கிங்டம் என்னும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களாலாகிலும் அவர்களுக்காகவாகிலும் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற, அல்லது மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் ராஜ்ஜியங்களைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் கவர்ன்மெண்டாருடைய மேல்விசாரணைக்குட்பட்டு வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற யாதொரு நாணயம் அல்லது கட்டியும், ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களிடமிருந்தாவது மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களின் ராஜ்ஜியங்களைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் கவர்ன்மெண்டாரிடமிருந்தாவது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு அனுப்பப்பட்டு வந்துகொண்டிருக்கும் யாதொரு நாணயம் அல்லது கட்டியும்,

ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களிடமிருந்து ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்காகிலும் மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களின் ராஜ்ஜியங்களைச் சேர்ந்த யாதொரு பாகத்தின் கவர்ன்மெண்டாருக்காகிலும் அனுப்பப்பட்டு வந்துகொண்டிருக்கிற யாதொரு நாணயம் அல்லது கட்டியும் - அந்த நாணயம் அல்லது கட்டியானது மேலேகண்டபடி வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற அல்லது மேலேகண்டபடி அனுப்பப்பட்டு வந்துகொண்டிருக்கிற கால அளவிலே 18, 19-வது பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட இருப்பின் பாகமாயிருப்பதாகக் கருதப்படும்.

இந்தியா பத்திரங்களை விற்கவும் அவைகளுக்கு பர்த்திசெய்யவும் அதிகாரம்.

23. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் உத்தரவு செய்யும்போது, கன்ட்ரோலரானவர் - 18-வது பிரிவைச் சேர்ந்த (9) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது 19-வது பிரிவைச் சேர்ந்த (8) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பத்திரங்களில் எதையாகிலும் எப்போதாயினும் விற்று ஒருவகை செய்யலாம்.

(2) அப்படி விற்பனை செய்யும் காரியத்துக்காக, கன்ட்ரோலர் எழுத்துமூலமாய்க் கேட்டுக்கொள்வதன்மேல் கல்கத்தாவிலுள்ள மின்ட் மாஸ்டராவது மேலேசொன்ன வேறே யாதொரு மின்ட் மாஸ்டராவது எல்லாக் காலங்களிலும் அப்படிப்பட்ட பத்திரங்களுக்குக் கையெழுத்துபண்ணி எண்டார்ஸ் செய்யவேண்டும்; மேலும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் உத்தரவுசெய்தால், கன்ட்ரோலரானவர் அப்படி விற்றுவிட்டவைகளுக்கு பர்த்தியாக இந்தியா கவர்ன்மெண்ட் பத்திரங்கள் வாங்கலாம்.

பத்திரங்களின் வட்டியைக்குறித்து கணக்கு.

24. இந்த ஆக்டின்படி இருப்பின் பாகமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பத்திரங்களுக்குச் சேர்ந்துவருகிற வட்டித் தொகையையும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட செலவுத் தொகையையும் பட்டுபடித் தொகையையும் கண்டுள்ள கணக்கை கன்ட்ரோலரானவர் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு வருஷந்தோறும் அனுப்பவேண்டியதோடுங்கூட, இந்தியா கெஜெட்டில் வருஷந்தோறும் பிரசித்தம்பண்ணவும் வேண்டும்.

கொண்டுவருகிறவருக்குக் கேட்டவுடனே பணம் செலுத்தும்படியான ஸர்க்கார் சம்பந்தமில்லாத பில்லுகள்.

கொண்டுவருகிறவருக்குக் கேட்டவுடனே பணம் செலுத்தும்படியான ஸர்க்கார் சம்பந்தமில்லாத பில்லுகள் அல்லது நோட்டுகளை வெளிவிடக்கூடாதென்று தடுப்பது

25. ப்ரிடிஷ் இந்தியாவிலே யாதொரு நபர் கொண்டுவருகிறவருக்குக் கேட்டவுடனே பணம் செலுத்தும்படியான யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜையாவது உண்டியையாவது ப்ராமிஸொரி நோட்டையாவது உடன்படிக்கையையாவது எழுதவுங்கூடாது அங்கீகரிக்கவுங்கூடாது உண்டுபண்ணவுங்கூடாது வெளிவிடவுங்கூடாது; மேலும், கொண்டுவருகிறவருக்குக் கேட்டவுடனே பணம் செலுத்தப்படத்தக்கவையாயுள்ள அப்படிப்பட்ட யாதொரு நபருடைய பில்லுகளின்மேலாவது உண்டிகளின்மேலாவது நோட்டுகளின்மேலாவது எவ்வளவு தொகை அல்லது தொகைகளையாகிலும் கடன் வாங்கவுங்கூடாது பாக்கி வைத்துக்கொள்ளவுங்கூடாது பற்றிக்கொள்ளவுங்கூடாது:

ஆனால், பாங்கர்கள் - ஷராப்புகள், அல்லது ஏஜென்டுகளினிடத்திலே அவர்களுடைய வாடிக்கைகாரர்களாலாவது அவர்களை ஏற்படுத்திக்கொண்டவர்களாலாவது கட்டப்பட்டு இவர்களுடைய வரவாகவும் இவர்கள் சொற்படி செய்வதற்காகவும் ஷை பாங்கர்கள் வகையராக்களால் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற பணத்தின் விஷயமாக, கொண்டுவருகிறவருக்குக் கேட்டவுடனேயாகிலும் மற்றெவ்விதமாயாகிலும் பணம் செலுத்தும்படியான செக்குகளையோ அல்லது ட்ராப்டுகளையோ (சிட்டுகளையோ) ஷை பாங்கர்கள் வகையராக்களேபேருக்கு மேலேகண்ட அவர்களுடைய வாடிக்கைக்காரர்கள் முதலியவர்கள் எழுதலாம்.

அப்படிப்பட்ட பில்லுகள் அல்லது நோட்டுகளை வெளிவிடுவதற்காகத் தண்டனையும் பிரியாது கொண்டுவருவதும்.

26. (1) யாதொரு நபர் 25 - வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் நடந்தால், அவர் - ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டினாலாவது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டினாலாவது குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுவதன்மேல், எதன்விஷயத்தில் அந்தக் குற்றம் செய்யப்படுகிறதோ அந்த பில் - உண்டி - நோட் அல்லது உடன்படிக்கையின் தொகை எவ்வளவோ அவ்வளவு தொகைக்கு அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

(2) நோட் வெளிவிடுகிற எந்த ஸர்க்கிளில் அப்படிப்பட்ட பில் - உண்டி - நோட் அல்லது உடன்படிக்கை எழுதப்படுகிறதோ, அங்கீகரிக்கப்படுகிறதோ, உண்டுபண்ணப்படுகிறதோ அல்லது வெளிவிடப்படுகிறதோ அந்த ஸர்க்கிளின் விசாரணை உத்தியோகஸ்தர் இந்தப் பிரிவின்படி ஒவ்வொரு பிரியாதையும் கொண்டுவரவேண்டும்.

உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

கணக்குகளுக்குக் கோஷ்வாரா.

27. கரென்ஸி டிபார்ட்மென்ட் கணக்குகளுக்குக் கோஷ்வாராவை ஒவ்வொரு மாதத்திலும் நாலு தரம் கன்ட்ரோலர் தயார்செய்து, அதைக் கூடுமான சீக்கிரத்தில் இந்தியா கெஜெட்டிலே பிரசித்தம் பண்ண வேண்டும்; அதில்—

(a) வழங்கிக்கொண்டிருக்கிற கரென்ஸி நோட்டுகளின் மொத்தத் தொகையையும்,

(b) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களாலாகிலும் அவர்களுக்காகவாகிலும் வைத்துக்கொள்ளப்பட்டோ, அல்லது இந்தியாவிலிருந்தாவது இந்தியாவுக்காவது வந்துகொண்டோ அல்லது காசடிக்கும் காலத்தில் மின்ட் மாஸ்டர் வசத்திலோ இருக்கும் கட்டி அல்லது நாணயத்தின் தொகையைப் பிரத்தியேகமாய்க் காட்டியும் பொன்னிலிருந்து வெள்ளியைப் பிரித்தும், இருப்பாக வைத்திருக்கப்பட்ட நாணயம் - கட்டி - ஆகிய இவைகளின் தொகையையும்,

(c) இருப்பின் பாகமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பத்திரங்களிலே ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெகரெடரி அவர்களால் வைத்துக்கொள்ளப்பட்டுள்ள பத்திரங்களையும், 18-வது பிரிவைச் சேர்ந்த (9) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது 19-வது பிரிவைச் சேர்ந்த (8) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது இந்தியாவிலே வைத்துக்கொள்ளப்பட்டுள்ள பத்திரங்களையும் தனித்தனியாய்க் காட்டி அந்தப் பத்திரங்களின் நாமமாத்திரமாயுள்ள மதிப்பையும் அவைகளுக்காகச் செலுத்தப்பட்ட கிரயத்தையும்,

(d) 20-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி பில் ஆவ் எக்ஸ்சேஞ்சுகளுக்கு ஈடாக வெளிவிடப்பட்ட கரென்ஸி நோட்டுகளின் தொகையையும்

கண்டெழுதவேண்டும்.

போக்கடிந்து போன நோட்டுகளைக் குறித்தும் துண்டிக்கப்பட்ட நோட்டுகளைக் குறித்தும் அரைகுறையாயுள்ள நோட்டுகளைக் குறித்தும் நிபந்தனை.

28. யாதொரு சட்டதிட்டத்திலாவது சட்ட விதியிலாவது இதற்கு மாறாக என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, போக்கடிந்துபோன, துண்டிக்கப்பட்ட அல்லது அரைகுறையாயுள்ள யாதொரு கரென்ஸி நோட்டின் மதிப்புத் தொகையை எந்த நபரும் இந்தியா கவர்ன்மென்டாரிடமிருந்து உரிமையுடன் வசூலிக்க அர்ஹராகமாட்டார் :

ஆனால், இன்ன சந்தர்ப்பங்களிலும் இன்ன திட்டங்களின்படியும் இன்ன வரையறைகளுக்குட்பட்டும் அந்த நோட்டுகளின் மதிப்புத் தொகையை தயா விஷயமாய் வாபஸ் செய்யலாமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதி மூலமாய் நிர்ணயிக்கலாம்.

விதிகள் செய்ய அதிகாரம்.

29. (1) இந்த ஆக்டின் காரியங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாயும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும் அப்படிப்பட்ட விதிகளில்,—

(a) இவ்வளவு பெயர்மதிப்புள்ளவைகளாகக் கரென்ஸி நோட்டுகளை வெளிவிடவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யலாம்;

(b) நோட்டுகளை வெளிவிடும் ஸர்க்கில்களில் எதன் எல்லையையாவது மாற்றுவதற்காக நிபந்தனை ஏற்படுத்தலாம்;

(c) இன்னின்ன இடங்களில் கரென்ஸி நோட்டுகளை வெளிவிடவேண்டுமென்று நிர்ணயிக்கலாம்;

(d) போக்கடிந்துபோன கரென்ஸி நோட்டுகள், துண்டிக்கப்பட்ட கரென்ஸி நோட்டுகள், அரைகுறையாயுள்ள கரென்ஸி நோட்டுகள் ஆகிய இவைகளின் மதிப்புத் தொகையை இன்ன சந்தர்ப்பங்களிலும் இன்ன திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டும் நோட்டுகளை வெளிவிட்ட ஆபிஸில் வாபஸ் செய்யலாமென்று நிர்ணயிக்கலாம்.

(3) அப்படிப்பட்ட ஒவ்வொரு விதியையும் இந்தியா கெஜெட்டில் பிரசித்தம் செய்ய வேண்டும்; அந்தப்படி பிரசித்தம் செய்யப்படுவதன்மேல், அது - இந்த ஆக்டில் விதிக்கப்பட்டிருந்தாற்போலவே செலாவணியாகும்.

ரத்தானவைகள்.

30. ஷெட்யூலில்கண்ட சட்டதிட்டங்கள் - அதன் கடைசி கலத்தில் குறிக்கப்பட்டிருக்கிற அளவுக்கு இதனால் ரத்தாகின்றன:

1910-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

ஆனால், 1910-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டின்படி வாங்கப்பட்ட சகல பத்திரங்களும் வெளிவிடப்பட்ட சகல நோட்டுகளும், அந்த ஆக்ட் 30-வது பிரிவின்படி வாங்கப்பட்டிருப்பதாக அல்லது வெளிவிடப்பட்டிருப்பதாகக் கருதப்படும்

சகல பத்திரங்களும் நோட்டுகளும் இந்த ஆக்ட் அமுலுக்கு வரும் காலத்தில் விற்கப்படாமலிருந்தாலும் வழங்கிக்கொண்டிருந்தாலும், அவை - இந்த ஆக்டினபடி முறையே வாங்கப்பட்டிருப்பவைகளாகவும் வெளிவிடப்பட்டிருப்பவைகளாகவும் எண்ணப்படும் :

மேலும், ஷை 30 - வது பிரிவின்படி கான்பூர் என்னும் பட்டணத்திலுள்ள (நோட்) வெளிவிடும் ஆபிஸிலிருந்து வெளிவிடப்பட்டிருப்பதாக எண்ணவேண்டிய சகல கரென்ஸி நோட்டுகளும் அந்த ஆபிஸிலிருந்து வெளிவிடப்பட்டிருப்பவைகளாகவே இன்னும் எண்ணப்படும்.

ஷெட்யூல்.

(ரத்து செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.)

[30 - வது பிரிவைப் பார்க்கவும்.]

வருஷம்.	நம்பர்.	சுருக்கமான பெயர்.	இவ்வளவுமட்டில் ரத்து.
1910	2	1910-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்ட்.	எவ்வளவு வரையில் ரத்து செய்யப்படாமலிருக்கிறதோ அவ்வளவு.
1911	7	1911-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி (திருத்துவதற்கான) ஆக்ட்.	முழுவதும்.
1914	10	1914-ம் வருஷத்து ரத்துசெய்வதற்கும் திருத்துவதற்குமான ஆக்ட்.	இரண்டாவது ஷெட்யூலில் எவ்வளவு 1910-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டுக்குப் பிரயோகப்படுகிறதோ அவ்வளவு.
1917	19	1917-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி (திருத்துவதற்கான) ஆக்ட்.	எவ்வளவு வரையில் ரத்துசெய்யப்படாமலிருக்கிறதோ அவ்வளவு.
1920	45	1920-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி (திருத்துவதற்கான) ஆக்ட்.	முழுவதும்.
1922	12	1922-ம் வருஷத்திய இந்துதேசத்து அரசிறை சம்பந்தமான ஆக்ட்.	6-வது பிரிவு.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.